பங்கேற்போம்! உரிமையை நிலைநாட்டுவோம்!

அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச்சுற்றுக்கு மட்டும்

உயிர் : 02
குரல் : 02

ஏப்ரல் 2024 – ஜூன் 2024




**கல்வி நமது உரிமை! அதை கற்பது நமது கடமை!**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்

**சிட்டெறும்பு பேசுது**
உயிர் : 02 | குரல் : 02
ஏப்ரல் 2024 – ஜூன் 2024

ஆசிரியர்கள்
L. யுவராணி, H. யுவஸ்ரீ

இணை ஆசிரியர்கள்
S. ஜிஷ்ணு, K. நிஷாந்த்
G. விநாயகமூர்த்தி

உதவி ஆசிரியர்கள்
G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி,
P. தமிழ், S. லோகேஷ்,
V. சுஜிதா, S. தங்கவித்யா,
S. சக்தி முருகன், R. கன்னியம்மா,
M. யுவராஜ்

நிருபர்கள்
S. நிவிஸ், A. ஹேமன்,
V. நாகராணி, M. ஷாகினா,
S. ஓவியா, D. ரொபினா,
M. ஜெனிலியா

ஓவியர்கள்
C. ஜெகன் S. ராபின்
V. நாகவள்ளி R. தேவன்

கௌரவ ஆசிரியர்
திரு. மோ.கணேசன்
நிர்வாக இயக்குநர், வாலு டிவி

நிர்வாகம்
முனைவர் வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

ஒருங்கிணைப்பு
திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல்
வழிநடத்துநர்

வழிநடத்துநர்
திரு. K. சுரேஷ்
விதை நெல் உறுப்பினர்

வடிவமைப்பு
ஆசிரியர் குழு
துரை. அருணாச்சலம்

தொடர்பு முகவரி
அருணோதயா குழந்தை
தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு, இராயபுரம்,
சென்னை - 600 013.
Phone: 044 - 42632264
Mobile: 94440 51529 / 89252 74527

மின் அஞ்சல்
arunodhayaorg@gmail.com

இணையதளம்
www.arunodhayacentre.in

# ஆசிரியர் உரை

**நண்பர்கள் அனைவருக்கும் வணக்கம்!**

அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு உறுப்பினராகிய நீங்கள் அனைவரும் உங்கள் கருத்துக்களை கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், படங்களாகவும் கொடுத்து சிட்டெறும்பின் பயணம் தொடர ஆர்வமுடன் செயல்பட்டு வருகிறீர்கள். அதற்காக உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி!

பொதுத் தேர்வுகள், தேர்வு முடிவுகள், புதிய பள்ளி, புதிய கல்லூரி என நாம் கல்வி குறித்து சிந்தனை செய்து கொண்டு இருகின்றோம். எனவே கல்வியைக் குறித்து நம் கருத்துகள் என்ன என்பதை எழுதுவோம் என்று முடிவு செய்து, கல்வியின் முக்கியத்துவம் குறித்த நம் கருத்துக்களை உள்ளடக்கி இந்த புத்தகம் வெளிவந்துள்ளது.

ஆமாம்... கல்வி என்றால் என்ன நண்பர்களே?

விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவதுதான் கல்வி. மேலும், திருக்குறளின் கல்வி அதிகாரத்தில்

**“கேடில்விழுச் செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை”**

என்ற குறளில் கல்வியின் சிறப்பை நாம் நன்கு அறியும் வண்ணம் திருவள்ளுவர் எழுதியுள்ளார்.

அழிவில்லாத சிறந்த செல்வம் என்பது கல்விச் செல்வமே. அத்தகைய சிறப்பு வாய்ந்த கல்விச் செல்வம் நம்மைப் போன்ற குழந்தைகளுக்கு மிகவும் முக்கியம்.

ஆனால், நமது நாட்டில் கோவிட்-19க்குப் பிறகு குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் குழந்தைத் தொழில், குழந்தைத் திருமணம், பள்ளியிலிருந்து இடைநிற்றல், சரியான ஆவணங்கள் இன்மை, வறுமை, பிளவுபட்ட குடும்பங்கள் போன்ற காரணங்களால் கல்விச் செல்வத்தை அடைய முடியாமல் உள்ளனர்.

**அனைத்து குழந்தைகளும் பள்ளி செல்ல நாம் செய்ய வேண்டியது என்ன?**

- மேற்கூறிய பிரச்சனைகளுடைய குழந்தைகள் நம் பகுதிகளில் இருந்தால் அவர்களுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி பள்ளிக்குச் செல்ல உதவி புரிய வேண்டும்.
- குழந்தைகளின் நிலை குறித்து அரசின் பார்வைக்குக் கொண்டு சென்று ஆதரவு திரட்ட வேண்டும்.
- 18 வயதிற்கு கீழ் உள்ள அனைத்து குழந்தைகளும் பள்ளிப் படிப்பை கவனமுடன் படித்து முடித்து உயர் கல்விக்குச் செல்ல வேண்டும் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த சிட்டெறும்பு இதழில் கல்வியின் முக்கியத்துவத்தைக் குறித்த குழந்தைகளின் கருத்துக்கள் அடங்கி உள்ளன. நம் சங்கக் குழந்தைகள் அனைவருக்கும் இந்தப் புத்தகம் சென்றடைந்து இதில் உள்ள கருத்துக்கள் பரவலாக்கப்பட வேண்டும்.



**காலம் பொன் போன்றது! கல்வி கண் போன்றது!**

**L.யுவராணி,** இதழ் ஆசிரியர்

# குழந்தைகள் சங்கத்தின் மூன்று மாத செயல்பாடுகள்

**ஏப்ரல் 2024 முதல் ஜூன் 2024 வரை அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பின் செயல்பாடுகள்**

## குழந்தைகள் சங்க கூட்டங்கள்

| மாதம் | செயல்பாடு |
|---|---|
| ஏப்ரல் | நாடாளுமன்றத் தேர்தலுக்கான குழந்தைகளின் கோரிக்கைகள் தயார் செய்யப்பட்டன. |
| மே | இளம் வழிநடத்துனர் பயிற்சி குறித்தும் அதற்கான திட்டமிடலும் செய்யப்பட்டது. ஒருநாள் திட்டமிடல் பயிற்சி முகாம் குறித்து திட்டமிடல். |
| ஜூன் | சிட்டெறும்பு பேசுது இதழுக்குத் தேவையான கவிதை, கட்டுரை எழுதுதல், உலக குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினம் குறித்து திட்டமிடல். |

- ஏப்ரல் மாதம் நாடாளுமன்ற தேர்தலுக்காக குழந்தைகள் எழுதிய கோரிக்கைகளைத் தொகுத்து அனைத்து குழந்தைகள் சங்கத்திற்கும் கொடுக்கப்பட்டன. கோரிக்கைகளைக் குழந்தைகள் படித்து சரி பார்த்தனர்.



- நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் திரு. மனோ (ADMK), திருமதி. அமுதினி, (நாம் தமிழர் கட்சி), திரு. பால் கனகராஜ், (பாரதிய ஜனதா கட்சி) ஆகியோருக்கு குழந்தைகள் தயாரித்த கோரிக்கைகள் அடங்கிய கையேடுகளைக் கொடுத்து ஆதரவு திரட்டினர்.







- ஏப்ரல் 16 அருணோதயா குழந்தைகள் சங்கக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றது. இதில் பயிற்சிகள் குறித்து குழந்தைகள் திட்டமிட்டனர். இன்றைய சூழலில் குழந்தைகளுக்கு என்ன பிரச்சனைகள் உள்ளன என்பதைக் குறித்து கலந்துரையாடல் செய்தனர். கால நிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு குழந்தைகளுக்கு அவசியம் தேவை. இந்த வருடம் முழுவதும் அதுகுறித்து நாம் அறிந்து கொண்டு சமூகத்தினருக்கு விழிப்புணர்வு கொடுக்க வேண்டும் என முடிவு செய்தனர்.



- நாடாளுமன்றத் தேர்தல் - 2024 முன்னிட்டு பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு 13 மாவட்டங்கள் இணைந்து தயாரித்த தேர்தல் அறிக்கை வெளியீடு மற்றும் பத்திரிக்கையாளர் சந்திப்பு 4.4.24 அன்று சென்னை பத்திரிக்கையாளர் சங்கத்தில் நடைபெற்றது.



- ஏப்ரல் 26 அன்று **சிட்டெறும்பு பேசுது** இதழின் கௌரவ ஆசிரியர் மோ.கணேசன் தலைமையில் ஆசிரியர் குழு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பக்க வடிவமைப்பு (layout) குறித்து கற்றுத் தரப்பட்டது. **சிட்டெறும்பு பேசுது** மூன்றாவது இதழின் பக்க வடிவமைப்பானது குழந்தைகளால் தயாரித்து வெளியிடப்பட்டது. அது அந்த இதழின் சிறப்பம்சமாக இருந்தது.



- 3.5.24 – 5.5.24 ஆகிய மூன்று நாட்கள் அன்னனூரில் உள்ள டோனாகேல முகாமில் இளம் வழிநடத்துனர் பயிற்சி நடைபெற்றது. காலநிலை மாற்றம் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 40 குழந்தைகள் கலந்து கொண்டனர். திரு. சுரேஷ், விதைநெல், திருமதி. செல்வி, கருத்தியல் வழிநடத்துனர் ஆகியோர் கலந்து கொண்டனர். Chennai Climate Action for Change என்ற நிறுவனத்திலிருந்து ஆறு பயிற்சியாளர்கள் குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்தனர். கால நிலை மாற்றம் என்றால் என்ன? காரணிகள் என்ன? விளைவுகள் என்ன? சமூகநீதி, சுற்றுசூழல் நீதி, மரங்களின் பயன்கள் குறித்தும், காலநிலை மாற்றம் குறித்த பிரச்சனைகளை மக்களுக்குப் புரியும் வண்ணம் ஊடகங்கள் மூலம் எடுத்துரைக்க, வீதி நாடகப் பயிற்சி மற்றும் கானா பாடல்கள் போன்றவை கற்றுக்கொடுக்கப்பட்டன. இறுதியில் 40 குழந்தைகளில் 20 குழந்தைகள் இளம் வழிநடத்துனர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த 20 இளம் வழி நடத்துனர்களும் பகுதியளவு குழந்தைகள் சங்கத்திற்கு காலநிலை மாற்றம் குறித்த பயிற்சியை அளித்தனர்.



- மே 14 மற்றும் மே 15 அன்று குழந்தைகள் சங்கக் குழந்தைகள் நடத்திய பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு வீதி நாடகம் திருவொற்றியூர் மற்றும் எண்ணூர் பகுதிகளில் நடைபெற்றது. வீதி நாடகத்தைக் கண்டுகளித்த பெற்றோர்கள் குழந்தைகளுக்கு வரவேற்பைக் கொடுத்ததுடன் இனி நாங்கள் சீரியல் பார்ப்பதைக் குறைத்துக் கொள்வோம் என்றும் கூறினார்கள்.



- மே 17 முதல் 30 வரை ஒருநாள் திட்டமிடல் முகாம் அனைத்து குழந்தைகள் சங்கத்திலும் நடத்தப்பட்டன. மொத்தம் 41 முகாம்கள் நடைபெற்றன. இதில் 1965 குழந்தைகள் கலந்து கொண்டனர். காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு அடைந்ததுடன் காலநிலை மாற்றம் குறைய மரம் நடுதல், வேண்டாம் பிளாஸ்டிக் பிரச்சாரம், நீர் நிலைகளை சுத்தபடுத்துதல் என்ற மூன்று செயல்பாடுகளைச் செய்து தங்கள் பகுதியில் விழிப்புணர்வு அளித்து, குழந்தைகள் மற்றும் பொதுமக்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என முடிவு செய்துள்ளோம். முடிவில் காலநிலை மாற்றம் என்ற தலைப்பில் மாநாடு நடத்தி அரசிடம் ஆதரவு திரட்ட முடிவு செய்துள்ளோம்.



- ஜூன் - 5 அன்று அருணோதயா குழந்தைகள் சங்கக் குழந்தைகளால் தயாரித்து உருவாக்கப்பட்ட **சிட்டெறும்பு பேசுது** மூன்றாவது இதழ் வெளிவந்தது. அந்த இதழ் அனைத்து குழந்தைகள் சங்கத்திற்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டது. நூலகத்திற்கும் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்ட குழந்தைகள் சங்கத்தினரும், ஆசிரியர்களும் இதழைப் படித்துப் பார்த்துவிட்டு தங்களது கருத்துக்களை நிச்சயம் பகிர்ந்து கொள்வதாகக் குறிப்பிட்டனர். மேலும் இந்த இதழை குழந்தைகள் அற்புதமாக நடத்தி வருவதற்கு தங்களது பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர்.



- மே 31 உலக புகையிலை ஒழிப்புதினம் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இதில் குழந்தைகளுக்கு ஓவியம் வரைதல் போட்டி, விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தினர். குறிப்பாக கொருக்குப்பேட்டை, எண்ணூர், திருவொற்றியூர், இராயபுரம் ஆகிய பகுதிகளில் குழந்தைகள் சங்கக் குழந்தைகள் விழிப்புணர்வு கொடுத்தனர். மேலும், உலகப் புகையிலை எதிர்ப்பு தினம் -2024ஐ முன்னிட்டு இணையதளம் வழியாக நடத்தப்பட்ட புகையிலைக்கு எதிரான விழிப்புணர்வு போட்டியில் அருணோதயா குழந்தைகள் சங்கக் குழந்தைகள் வரைதல் மற்றும் பாடல் போட்டியில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர்.



- ஜூன் - 12 அன்று உலகக் குழந்தை உழைப்பு எதிர்ப்பு தினம் குறித்த கையெழுத்து பிரச்சாரம் அனைத்து குழந்தைகள் சங்கத்திலும் நடைபெற்றது. எண்ணூர் மற்றும் கொருக்குப்பேட்டையில் உள்ள பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் மாணவர்களிடம் குழந்தைகள் சங்கக் குழந்தைகள் மூலம் கையச்சுப் பிரதிகளைத் தந்து பிரச்சாரம் நடைபெற்றது. திருவொற்றியூர் பகுதியிலும் இப்பிரச்சாரம் நடைபெற்றது. இதன் மூலம் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோர் விழிப்புணர்வு அடைந்தனர். பிரச்சாரத்தில் ஈடுபட்ட குழந்தைகளை பொதுமக்கள் பாராட்டினர்.




- ஜூன் 17அன்று ஒருநாள் திட்டமிடல் முகாம் முடிந்து இளம் வழிநடத்துனர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் 18 இளம் வழிநடத்துனர்கள் கலந்து கொண்டு ஒருநாள் திட்டமிடல் பயிற்சி நடத்தியதின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.



- பயிற்சி எடுக்கச் சென்ற இடங்களில் குழந்தைகள் நல்ல ஒத்துழைப்பு கொடுத்தனர். கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.
- காலநிலை மாற்றம் என்ற தலைப்பில் பயிற்சி கொடுத்தது குழந்தைகளுக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது.
- எங்களுக்கு தன்னம்பிக்கை வளர்ந்தது.
- தயக்கமின்றி பயிற்சி கொடுக்க முடிந்தது.
- பயமின்றி பயிற்சி தர முடிந்தது.
- குழந்தைகள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடிந்தது.
- புதிய பகுதிகளுக்கு நேரில் சென்று பார்க்க முடிந்தது.
- புதிய நண்பர்கள் கிடைத்தனர்.

சில இடங்களில் குழந்தைகள் சரியாக கவனிக்கவில்லை. முடிவில் அவர்களையும் கவனிக்க வைத்து பயிற்சி கொடுத்தோம் என்று இளம் வழிநடத்துனர்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.



**H.யுவஸ்ரீ,** இதழ் ஆசிரியர்

# புதிய கல்வியாண்டை வரவேற்போம்!

உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உண்டு. 1. தாயின் கருவறை – உயிரைத் தருகின்றது. 2. வகுப்பறை – அறிவைத் தருகின்றது.

ஒரு குழந்தையைப் பத்திரமாய்ப் பார்த்து வளர்ப்பது தாயின் கடமை எனில், சித்திரமாய்ச் செதுக்குவது ஆசிரியரின் கடமை. அப்படிப்பட்ட குழந்தைகளை சித்திரமாய்ச் செதுக்க ஆசிரியருக்கு இணையாகப் பாடுபடுகிறது நமது அருணோதயா குடும்பம். எல்லாப் பிள்ளைகளும் கல்வியைப் பெறவும் வாழ்வில் உயர்ந்த நிலைக்கு வரவும் பாடுபடும், நம் அருணோதயா குடும்பத்தில் உள்ள அனைவரையும் வாழ்த்துகிறேன். குழந்தைகளின் குறும்புகளை ரசித்து, குழப்பங்களைத் தீர்த்து, தவறுகளைத் தவிர்த்து, தன்னம்பிக்கை கொடுத்து, வெற்றிக்கு வழி வகுத்து, பொறாமையின்றி சகோதரத்துவத்துடன் செயல்படும் நம் அருணோதயா குடும்ப அங்கத்தினர்களின் சிறப்புப் பணியை வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன்.

கல்லை உளியால் செதுக்கி உருவம் கொடுப்பது சிற்பி என்றால், மாணவர்கள், பெண்கள் அனைவரையும் தன் வார்த்தைகளால் முன்னுக்கு கொண்டுவர பாடுபடும் பல சிற்பிகள் நம்மிடம் உண்டு. நேற்றைய சிறு சிறு தோல்விகளை மறந்து நாளைய வெற்றியை நோக்கி நம்பிக்கையுடன் தொடங்குவோம் இந்த கல்வி ஆண்டை.

The future belongs to those who believe in the beauty of their dreams.

எதிர்காலம் கனவுகளின் அழகை நம்புபவர்களுக்கு சொந்தமானது. எனவே வளர்ச்சியைக் குறித்து கனவு காணுங்கள், உழையுங்கள், வெற்றி நமதே.... நன்றி.



**V.சசிரேகா,**
**நிர்வாக அதிகாரி, அருணோதயா**

# அனைவருக்கும் திறமையுண்டு! அதை அறிந்தால் வெற்றியுண்டு!

எனது பெயர் பி.சிவகார்த்திகேயன். நான் மணிகண்ட முதலி அரசு உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். என்னுடைய அப்பா கூலி வேலை செய்கிறார். எனக்கு படிப்பில் ஆர்வம் இல்லாத காரணத்தினால் பள்ளிக்குச் செல்ல மாட்டேன். ஆனால், விளையாட்டில் ஆர்வம் உண்டு. எங்கள் பகுதியில் இருக்கும் கேரம் போர்டு பயிற்சியாளர் என்னை விளையாட அழைத்துச் சென்றார். எனக்கு அந்த விளையாட்டில் ஆர்வம் அதிகமாக ஏற்பட்டுள்ளது. என்னிடம் விளையாடுவதற்கு கேரம் போர்டு இல்லை.

அந்த சமயத்தில் நமது அருணோதயா குழந்தைகள் சங்கம் சார்பாக விளையாட்டுப் பொருட்கள் கொடுத்தார்கள். அதில் கேரம் போர்டு இருந்தது. எங்கள் சங்கக் கூட்டத்தில் குழந்தைகள் சங்கப் பொறுப்பாளர் திருமதி ருக்குமணி மேடம் அவர்கள், விளையாடுவதால் குழந்தைகளிடம் என்ன நன்மைகள் ஏற்படும் என்று கூறினார்கள். நமது அருணோதயா கொடுத்த கேரம் போர்டு மூலம் நிறைய பயிற்சிகள் எடுத்துக் கொண்டேன்.

என் தந்தை ஒரு மாற்றுத்திறனாளி. எனது தாய் வீட்டு வேலை செய்து வருகிறார். எனக்கு இரண்டு தங்கைகள் உள்ளனர். இவர்கள் அனைவரும் என்னுடைய விளையாட்டுக்காக என்னை ஊக்கப்படுத்தினார்கள். எனது பயிற்சியாளர் எனது திறமைகளைக் கண்டு நிறைய இடங்களுக்கு விளையாட அழைத்துச் சென்றார். இதன் மூலம் நான் நிறைய பரிசுகள் பெற்றேன். மெடல்கள், சான்றிதழ்கள் கிடைத்தன. அதே சமயம் படிப்பிலும் எனக்கு ஆர்வம் வந்தது. நான் நன்றாகப் படித்தேன்.

பகுதியில் உள்ள மக்களும் என்னைப் பாராட்டினார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பாடங்களையும் விரும்பிப் படிக்கிறேன். விளையாடுவதினால் நமது மூளை சுறுசுறுப்பாக செயல்படுகிறது. மேலும், திறன்களும் அதிகமாக வளர்கிறது. நண்பர்களே நீங்களும் விளையாடுங்கள். கல்வியிலும் கவனம் செலுத்துவது முக்கியம். நன்றாகப் படிப்போம். எனது திறனைக் கண்டறிந்து அதனை வெளிக்கொணர்ந்த எனது அருணோதயா குழந்தைகள் சங்கத்திற்கும் அருணோதயாவிற்கும் நன்றியைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். ■



**பி. சிவகார்த்திகேயன்,**
**ஏழாம் வகுப்பு**

## இதுவே என் கவிதை

**மாதத்தில் சிறந்தது தை**
**நமக்கு வேண்டாம் போதை**
**தேடுவோம் நல்ல பாதை**
**நாம் ஆகலாம் மாமேதை**
**இதுவே என் கவிதை**
**போதைப் பொருட்களை ஒழித்திடு**
**போதையில் இருந்து விழித்தெழு!**



**M.K. நகுலன், 11 ஆம் வகுப்பு,**
**கொருக்குபேட்டை.**

# தண்ணீர்

**முன்கதை சுருக்கம்**

**சென்ற இதழில் இந்திராவின் கிராமத்தில் தண்ணீர் தட்டுப்பாடு குறித்தும், அவர்கள் கிராமத்தில் உள்ள ரயில் நிலையத்தில் இரண்டு நிமிடம் நிற்கும் தொடர்வண்டியில் தண்ணீர் பிடித்துப் பயன்படுத்துவார்கள். விரைவாக செல்பவர்கள் மட்டுமே அந்த இரண்டு நிமிடத்தில் இரண்டு குடம் தண்ணீர் பிடிக்க முடியும் என்பதைப் பார்த்தோம். இனி...**

தொடர் கதை

கிராமத்தில் உள்ள அனைத்து பெண்களும் தூரத்தில் தொடர்வண்டி வரும் சத்தத்தைக்கேட்டுக் குடத்தை எடுத்துக்கொண்டு விரைவாக ஓடினார்கள். இந்திராவும் குடத்தை எடுத்துக்கொண்டு அனைவரையும் முந்திக்கொண்டு ஓடினாள். நிலையத்தை தொடர்வண்டி வந்தடைந்தது. இந்திரா வேகமாகச் சென்று தொடர்வண்டியின் பின்புறம் உள்ள பெட்டியின் மீதேறி, குடத்தை வைத்து தண்ணீர் பிடிக்க ஆரம்பித்தாள். தண்ணீர் சிறிது சிறிதாக வந்தது. குடம் நிறைவதற்கு அதிக நேரம் ஆனது. ஒரு குடம் நிரம்பியது. அந்தக் குடத்தை மூச்சிறைக்க ஓடிவந்து தொடர்வண்டிக்கு கீழே நின்றிருந்த அம்மாவிடம் கொடுத்தாள் இந்திரா. அம்மா அந்த தண்ணீர் நிரம்பிய குடத்தை வாங்கிக் கீழே வைத்தார்.

“ஏன்டி இந்திரா... தொடர்வண்டி கிளம்புவதற்குள் இன்னொரு குடத்திலும் தண்ணீர் நிரப்பு” என்று உரக்கக் கூறினார் அம்மா. “சரி அம்மா...” என்ற இந்திரா இன்னொரு குடத்திலும் தண்ணீர் பிடிக்க ஆரம்பித்தாள். அதற்குள் தொடர்வண்டி “பாம்...பாம்...” என்று ஒலி எழுப்பியது. பயந்து போன அம்மா, “இந்திரா... வேகமாகக் கீழே எறங்கு. வண்டி கிளம்பப் போகிறது” என்று கத்தினார். “அம்மா குடம் நிரம்பப்போகிறது. நான் எடுத்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் முன்னால் போய்க்கொண்டு இருங்கள்” என்று கூறினாள்.

ரயில் பொறுமையாக நகர்ந்தது. நாம் குடம் நிரம்பியதும் குதித்து விடலாம் என்று இந்திரா நினைத்தாள். ஆனால், கண் இமைக்கும் நேரத்தில் தொடர்வண்டி வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. மிரண்டு போன இந்திரா கிழே குதிக்க முயற்சி செய்தபோது ஒரு வட நாட்டு பெண் இந்திராவின் கையைப் பிடித்து இழுத்து, “என்ன தற்கொலைக்கு முயற்சி செய்கின்றாயா?” என்று இந்திராவைத் தடுத்து நிறுத்தினார்.



**(தொடரும்)**

**K. நிஷாந்த், 10-ஆம் வகுப்பு**

---

# முயற்சியுடன் பயிற்சி செய்தால் நம்மாலும் முடியும்!

என் பெயர் சௌந்தர்யா. நான் எம்ஜிஆர் நகரில் என் அப்பா, அம்மா, அக்காவுடன் வசித்து வருகிறேன். அப்பா சென்ட்ரிங் கூலி வேலை. அம்மா டிபன் வியாபாரம். அப்பா, அம்மா படிக்கவில்லை.

அக்கா +2 தேர்வில் தோல்வியடைந்ததால் படிப்பு பிடிக்கவில்லை என்று கூறி, பள்ளியை விட்டு நின்று விட்டாள். என்னுடைய குடும்பத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் திறமையாகப் படித்தேன். காலையில் 4 மணிக்கு எழுந்து படிப்பேன். அம்மாவும் என்னுடன் எழுந்து டீ போட்டுத் தருவார்கள். என்னுடைய பள்ளி ஆசிரியர் பெரியசாமி சார் என்னை ஊக்கப்படுத்தினார். எந்த நேரத்தில் என்ன உதவி கேட்டாலும் எந்த சந்தேகம் கேட்டாலும் சொல்லித் தருவார். என் குடும்பத்தை நினைவுபடுத்திக் கொண்டே இருப்பார்.

“உன்னால் முடியும். அதிக மதிப்பெண் எடுத்து சாதிக்க வேண்டும்” என்று ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். கடந்த +2 பொதுத்தேர்வில் 600க்கு 549 மதிப்பெண்கள் எடுத்து இருந்தேன். என் குடும்பத்தினர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். என்னுடைய குடும்பத்தை விட, சித்தி, சித்தப்பா எனக்கு கேக் வெட்டி என் வெற்றியைக் கொண்டாடினார்கள். என்னுடைய ஆசிரியர்கள் என்னை பாராட்டினார்கள். உயர்கல்வி முடித்து வேலைக்குச் சென்று எனது குடும்பத்தை உயர்த்துவேன்.



**சௌந்தர்யா**

# என் லட்சியத்தை நோக்கி...

ஞானவேல் எனும் நான், ஏழாம் வகுப்பு படிப்பு முடித்து, கடைசி நாள் தேர்வு எழுதிவிட்டு என் நண்பர்களைச் சந்தித்தேன். எனக்கு அப்போது தெரியாது. நான் திரும்பவும் என் நண்பர்களைப் பார்க்கப்போவதில்லை என்று. கோடை விடுமுறை முடித்து நான் பள்ளிக்கு சென்றேன். ஆனால், இது நான் முதலில் படித்த பள்ளி இல்லை.

என் ஆசிரியர், என் பள்ளி அனைத்தையும் நான் மிஸ் பண்ணினேன். புதுமையான நண்பர்கள், புதிய ஆசிரியர்கள். அது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது. என்னுடைய நண்பர்கள் அங்கு இல்லை. எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. எப்போதும் வகுப்பில் தனியாக இருந்தேன். வீட்டிலும் கவலையாக இருந்தேன். அப்போது என்னுடைய அம்மாவும் அப்பாவும் அறிவுரையும் ஆறுதலும் கூறினார்கள்.

எனக்கு கல்வி மீது இருந்த ஆர்வமும், என்னுடைய குடும்ப சூழ்நிலையும் மீண்டும் என்னுடையப் படிப்பைத் தொடர வைத்தது. புதிய நண்பர்களுடன் பழக ஆரம்பித்தேன். அனைவரிடமும் அன்பாகப் பேசினேன். எனக்குத் தெரிந்தவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். இதனால் அனைவருக்கும் என்னைப் பிடித்தது. நான் கல்வியில் ஆர்வமாக இருப்பதாலும், சந்தேகங்களைத் தயக்கமின்றி கேட்டுத் தெரிந்துக்கொள்வதாலும் என் ஆசிரியர்களுக்கும் என்னைப் பிடித்தது. இப்போது கொஞ்சம் கொஞ்சமாக இந்த பள்ளியும் எனக்கு பிடிக்க ஆரம்பித்தது. படிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து கொண்டேன். கல்வி மட்டுமே அனைத்தையும் மாற்றும் என்பதை உணர்ந்து கொண்டேன். நான் படித்து பெரிய காவல்துறை அதிகாரி ஆவேன்.



**கே.ஞானவேல்,**
**8-ஆம்வகுப்பு, திருவொற்றியூர்.**

# என் சாதனை இனியும் தொடரும்

என் பெயர் சர்மிளா. கடந்த 2023-24 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 447 மதிப்பெண் பெற்றேன். அன்றைக்குக் கொடுக்கும் வீட்டுப் பாடங்களை அன்றே படித்து முடிப்பேன். என் அப்பா பெயர் கலியபெருமாள். அவர் தச்சர் வேலை செய்கிறார். என் அம்மா சுமதி. அட்டை கம்பெனியில் வேலை செய்கிறார். நான் வெள்ளையன் செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறேன்.

எனக்குப் பல் மருத்துவராக வேண்டும் என்று ஆசை. 11 மற்றும் 12ஆம் வகுப்பு என் பள்ளியில் தொடர வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். ஏன் என்றால் என் பள்ளியின் கட்டணம் மிகக் குறைவு. என் பள்ளியில் எனது சமூக அறிவியல் பாடம் எடுக்கும் ஆசிரியர் திருமதி. உமா மகேஸ்வரி அவர்கள் மிகவும் படிக்க உதவுவாங்க. ஏதாவது புரியலன்னா தெளிவாக சொல்லித் தருவாங்க. 5 மணிக்கு வீட்டு வந்து, அரை கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று படிப்பேன். எனக்கு அங்கு நிறைய அக்காக்கள் பாடம் சொல்லித் தருவாங்க. ஷாலினி அக்கா எங்க எல்லோருக்கும் தன்னம்பிக்கை ஏற்படுத்தி விடுவாங்க. கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்க வைப்பாங்க. சனி மற்றும் ஞாயிறு கிழமைகளில் ராமநாதபுரம் பகுதியில் இருந்து திருவொற்றியூருக்கு வந்து எங்களுக்குப் பாடம் எடுப்பார்கள்.

எனக்கு கணக்கும் அறிவியலும் கொஞ்சம் வராது. ஆனால் என் சார், “அப்படி இல்லை. உனக்கு வரும்” என்று சொல்லிக்கொடுத்து, கணக்கில் 88 மதிப்பெண்களும், அறிவியலில் 86 மதிப்பெண்களும் எடுக்க வைத்தார். அவர் பெயர் திரு.பாலகுரு. எனக்கு இருக்கும் பலவீனம் கோபம். கோபத்தைக் குறைக்க வழி காட்டினார். தேர்வு நெருக்கத்தில் ஜனவரி மாதம் காலையில் போய் படிப்பேன். மார்ச் 24 வரைக்கும் மாலை 4 மணியிலிருந்து இரவு பத்து மணி வரைக்கும் படிப்பேன். வீடியோ கால் மூலம் பாடம் எடுப்பார்.

எனது வீடு மற்றும் எனது பள்ளியில் உள்ள அனைவரும் நான் அதிக மதிப்பெண்கள் எடுக்க உதவினார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி! தமிழில் 89, இங்கிலீஷில் 91, கணிதத்தில் 88, அறிவியலில் 86, சமூக அறிவியலில் 93 மதிப்பெண்கள் பெற்றேன். அனைவரும் என்னைப் பாராட்டினார்கள். ■



**K.சர்மிளா, 11-ஆம் வகுப்பு**

# கல்வி நமது உரிமை!
# கல்வியைக் கற்பது நமது கடமை!

**தமிழ்நாடு மாநிலக் குழந்தைகளுக்கான கொள்கையில் குழந்தைகள் குறித்து கூறப்பட்டுள்ளவை.**

'எல்லாக் குழந்தைகளும் மகிழ்ச்சியானதொரு குழந்தைப் பருவத்தை அனுபவிப்பதற்குத் தகுதியுடையவர்கள். மேலும் வன்முறை, சுரண்டல், தவறாக நடத்தப்படுதல் (சொல், உடல், மனம், பாலியல் ரீதியாக உள்ளிட்ட அனைத்து விதத்திலும்), புறக்கணிப்பு, அடிப்படைத் தேவைகள் கிடைப்பது, பாகுபாட்டில் இருந்து பாதுகாப்பான கண்ணியமான வாழ்க்கை நடத்துவதற்கான வாய்ப்பைப்பெறும் தகுதி உடையவர்கள்' என்று குழந்தைகளின் நிலை குறித்து கூறப்பட்டுள்ளது.

**குழந்தைகள் உரிமை மீதான உடன்படிக்கை சாசனம் (UNCRC) என்ன சொல்கிறது?**

விதி-28ன் படி, குழந்தைகளின் கல்வி பெறும் உரிமையை உறுப்பு நாடுகள் உணர்ந்து ஏற்றுக்கொள்கின்றன. கல்வி உரிமையை குழந்தைகள் ஆக்கப்பூர்வமான, முன்னேற்றகரமான முறையில் பெறவும், சம வாய்ப்புகளின் அடிப்படையில் பெறவும் உரிய வழிவகைகளை செய்து தந்து, கல்வி உரிமையை அனைத்து குழந்தைகளுக்கும் கிட்டச்செய்து வெற்றிகரமாக்கும் நோக்கில் உறுப்பு நாடுகள் கீழ்க்காணும் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

- ஆரம்பக் கல்வியை அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாயமாக்க வேண்டும்
- தொழிற்கல்வி போன்ற இரண்டாம் கட்ட கல்வி முறைகளுக்கான வழிகாட்டல்கள்.
- உயர்கல்வியை தகுதியின் அடிப்படையில் அனைத்து குழந்தைகளுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
- கல்வி மற்றும் தொழில் விவரம் குறித்த ஆலோசனைகள் அனைத்து குழந்தைகளுக்கும் அளிக்க வேண்டும்.
- குழந்தைகள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதற்கான ஊக்கம் தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- குழந்தைகள் பாதிப்படிப்பில் பள்ளியை விட்டு நின்று விடுவதைத் தடுக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

என்று வலியுறுத்தி கூறுகிறது.

**இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம் அல்லது கல்வி சட்டம் (RTE)**

ஆகஸ்ட் 4, 2009 இந்திய நாடாளு மன்றத்தில் இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம் இயற்றப்பட்டது. இந்த கல்வி உரிமைச் சட்டம் இந்தியாவில் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என்று கல்வியின் முக்கியத்துவத்தை இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 21A பிரிவு விவரிக்கிறது.

ஆனால் இன்றைய குழந்தைகளின் கல்வி நிலை கேள்விக்குறியாகவே உள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறை, பள்ளி இடைவிலகல், உயர் கல்வியிலிருந்து விலகல், தரமற்ற கல்வி, ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் உள்ள இடைவெளி, வறுமை காரணமாக கல்வி தொடர முடியாத நிலை, போதை, இனக்கவர்ச்சி, இளவயது திருமணம், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் போன்ற பிரச்சனைகளால் குழந்தைகளின் கல்வி, கேள்விக்குறியாக உள்ளது.

**குழந்தைகளின் கனவுகளை நினைவாக்கும் விளக்கு**

மேற்கூறிய பிரச்சனைகளை எல்லாம் நாம் கையாள வேண்டுமென்றால் நமக்குக் கல்வி அறிவு மிகமிக முக்கியம். மேற்கூறிய கொள்கைகள், சட்டங்கள் நமக்கு ஒரு மந்திர விளக்காக உள்ளது. அந்த மந்திர விளக்கை பயன்படுத்தி நமது கல்வி உரிமையை மீட்டெடுப்போம்.

**கல்வி நமது உரிமை!**
**கற்பது நமது கடமை!**



**S. விஷால்,**
**12-ஆம் வகுப்பு, எண்ணூர்**

# கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு!

அனைவருக்கும் வணக்கம். நான் உங்கள் நண்பன் செ.ஜிஷ்ணு. இக்கட்டுரையில் கல்விக்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினர் ஏன் அதிக முக்கியத்துவம் தருகின்றனர் என்று காண்போம்.

**கல்வி இல்லை என்றால் என்ன நடக்கும்?**

கல்வியில்லை என்றால் என்ன நடக்கும் என்று ஒரு சிறுகதையாகக் காண்போம். ஒரு பள்ளியில் ஒன்று முதல் பத்தாம் வகுப்புவரை உள்ளது. அப்போது புது மாணவர்கள் ஒன்றாம் வகுப்பு படிக்க வந்தனர். அதில் ஆகாஷ் என்ற மாணவனுக்கு படிப்பே வராது. ஆனால் அவன் ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை அனைத்துத் தேர்வுகளிலும் பாஸ் ஆகிவிட்டான்.

எப்படி என்றால் அவன் எட்டு திசையிலும் அருகில் உள்ளவரைப் பார்த்து எழுதுவான். நீங்கள் என்னைக் கேட்கலாம் மற்றவர்கள் பாஸ் ஆனால்தானே அவர்களைப் பார்த்து எழுத முடியும்?. அது ஒரு அற்புதமான பள்ளி. அதில் ஒன்றாம் வகுப்பில் இருந்தே மாணவர்களை நன்றாகப் படிக்க வைப்பார்கள். இவன் மட்டும் படிக்காமல் பார்த்து எழுதுவான். ஆனால் பத்தாம் வகுப்பில்



K. Purusothaman, 9th std

அவனால் பார்த்து எழுத முடியவில்லை. அவன் பாஸ் ஆகவில்லை. அவனைத் தவிர அனைவரும் பாஸ் ஆகி விட்டனர். அடுத்த ஆண்டும் இதே போல பாஸாகவில்லை. அவன் படிப்பை விட்டு வேலைக்கு சென்றான். அவனுக்கு ஒரு நாளைக்கு 200/- ரூபாய் வீதம்தான் சம்பளம்.

அவன் தந்தை இறந்த பின்பு அவனது சம்பளம் குடும்பத்திற்குப் போதவில்லை. அவன் தாயும் வேலைக்குப் போகிறார். அவன் தாய் இறந்த பின்பு அவன் பிச்சை எடுத்து இறுதியில் இறந்து போனான். இதன் மூலம் நமக்கு தெரியவருவது என்னவென்றால் இன்றைய சூழலில் கல்வி இல்லாமல் வாழ முடியாது என்று தெளிவாகத் தெரிகிறது.

**முடிவுரை**

நாம் அனைவரையும் இந்த தேசத்தின் எதிர்காலத் தூண்கள் என்று சொல்வார்கள். ஏனென்றால் நாம் நாட்டை தாங்கும் தூணாக இருக்கிறோம். அதற்கு கல்வி மிக மிக அவசியம். மாணவர்களாகிய நாம் அனைவரும் கல்வியின் அருமையை உணர்ந்து கல்வி கற்போம். வாழ்வில் உயர்வோம். ■



**S. ஜிஷ்ணு, 8-ஆம் வகுப்பு**

## பொது அறிவு கேள்விகள்

### கல்வி சார்ந்த கேள்விகள்

1. உலகில் எத்தனை கண்டங்கள் உள்ளன?
2. நாம் எந்த கண்டத்தில் வாழ்கிறோம்?
3. ஆசியாவின் பெரிய நாடு எது?
4. நம் பிரதமர் பெயர் என்ன?
5. இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் உள்ளன?

### விடைகள்

1. 7
2. ஆசியா
3. ரஷ்யா
4. திரு. நரேந்திர மோடி
5. 28 மாநிலங்கள்.
   8 யூனியன் பிரதேசங்கள்

# நீலகிரி மாவட்டம்

பயணக் கட்டுரை

என்னுடைய பெயர் K.நிஷாந்த். நான் எண்ணூர், ஆல் இந்தியா ரேடியோ திட்டப் பகுதியில் வசித்து வருகின்றேன். கடந்த மே 28, 29 ஆகிய தேதிகளில் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பின் 8வது மாநில மாநாடு நீலகிரி மாவட்டத்தில் உள்ள கோத்தகிரி என்னும் இடத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு அருணோதயா மூலம் கிடைத்தது.



### கோயம்புத்தூருக்கு ரயில் பயணம்

மே 27 அன்று காலை 6.20 மணிக்கு சென்னையில் இருந்து கோயம்புத்தூர் விரைவுத்தொடர் வண்டியில் பயணம் தொடங்கியது. என்னுடன் என் நண்பர்கள் G. சந்தோஷ், L. யுவராணி, H. யுவஸ்ரீ ஆகியோரும் வந்தனர். அருணோதயா இயக்குனர் முனைவர் வர்ஜில் டி'சாமி, ஷெரிப் அண்ணா, சுரேஷ் அண்ணா, திருமதி செல்வி, அருணோதயா பணியாளர் ஆகியோரும் உடன் வந்தனர். முதல் முறையாக நீண்ட ரயில் பயணம் சென்றேன். பகலில் சென்றதால் ஆறு, மலை, அணைக்கட்டுகள், கோவில்கள் போன்ற அனைத்து இடங்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்றேன். 2.30 மணியளவில் கோயம்புத்தூர் வந்தடைந்தோம். மதிய உணவு சாப்பிட்டோம். நான் இதுவரை சாப்பிடாத சீரக சம்பா அரிசி வெஜ் பிரியாணி! எனக்கு மிகவும் பிடித்தது. அடுத்து வேனில் கோத்தகிரிக்குச் சென்றோம்.

### கோத்தகிரி பயணம்!

தூரத்தில் ஒரு பெரிய வானளாவிய கருமையான மலை தெரிந்தது, “அங்குதான் நாம் போகப்போகின்றோமா?” என்று கேட்டேன். சுரேஷ் அண்ணா “ஆமாம்” என்றார். நான் வேன் ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தேன். எங்கள் பயணம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. வானளாவிய மலைகள், மலைச் சரிவுகள், அழகான மலர்கள், ஜில் என்ற உணர்வு, தேயிலைத் தோட்டங்கள் போன்றவற்றைப் பார்க்கும்போது எனக்குள் ஒரு வித மகிழ்ச்சி தோன்றியது. மேலே போகப்போக ஜில் உணர்வு அதிகமானது. சென்னையில் கடும் வெய்யிலில் மாட்டி சிக்கித் தவித்த நேரத்தில் இப்படி ஒரு ஜில் என்ற மலை பிரதேசத்திற்குச் செல்வது




ஒரு வரமாகத் தோன்றியது. கூடவே கொஞ்சம் பயமும் தோன்றியது. காரணம், நாங்கள் பயணித்த வேன் சுற்றி சுற்றி மலை மேலே ஏறியதுதான். மாலை 5 மணியளவில் கோத்தகிரி வந்தடைந்தோம். இதமான குளிர். தேயிலை தோட்டத்திற்கு நடுவே ஐலேண்ட் அறக்கட்டளை மலைச்சரிவில் இருந்தது. இது நாள் வரை நான் பார்த்திடாத இடம்.

### மாநாடு




பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு 8வது மாநில மாநாட்டில், 13 மாவட்டங்களில் இருந்து 65 குழந்தைகள் கலந்துகொண்டனர். மாநாட்டில் முதல் நாள் தேர்தல் நடைபெற்றது. அதில் அருணோதயாவைச் சேர்ந்த L. யுவராணி துணைப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்வி குறித்து குழந்தைகளுக்கு அவர்களின் மாவட்டங்களில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளது என்று மாவட்ட ரீதியாக, எழுதிப் பகிர்ந்து கொண்டு அவற்றை ஒரே கோரிக்கையாக தொகுத்து எழுதினோம். இந்த நிகழ்வினை எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் இருந்து செல்வி யுவஸ்ரீ  இளம் வழிநடத்துனராக இருந்து வழி நடத்தினார். G.சந்தோஷ் நிர்வாகக் குழுவாக இருந்து செயல்பட்டு மாநாட்டை வழி நடத்தினார். எழுதிய கோரிக்கைகளை சிறப்பு விருந்தினரிடம் கொடுக்கத் திட்டமிடப்பட்டது. அங்கு கொடுத்த உணவு எனக்குப் பிடித்திருந்தது. அந்த இடமும் அழகாக இருந்தது. மாநாடு முடிந்தது.

### ஊட்டி பயணம்

அங்கிருந்து கிளம்ப மனது வரவில்லை. 30ஆம் தேதி அதிகாலை 6 மணிக்கு எங்கள் இயக்குனர் அவர்கள் கார் புக் செய்து ஊட்டியை சுற்றி பார்க்க அழைத்துச் சென்றார். என் வாழ்வில் மறக்க முடியாத பயணம் அது! நான் கண்ட காட்சிகளை உங்களுக்கும் கூறுகிறேன். அதிகாலை நேரம் இதமான குளிரில் ஊட்டி சொர்க்கமாக இருந்தது. கார் ஊட்டி மலைமீது ஏறிக்கொண்டு இருக்க, கார் ஓட்டுனர் ஊட்டியின் சிறப்புகளை கூறிக்கொண்டே சென்றார். தொட்டபெட்டா மலை செல்லும் வழியைப் பார்த்தோம். அங்கு செல்வதற்கு அதிக நேரம் ஆகும் என்பதால் அங்கே நாங்கள் போகவில்லை. ஊட்டி வந்தடைந்தோம்.

### மலர் கண்காட்சி

ஊட்டி மலர் கண்காட்சி சென்றோம். பலவித பூக்களை வைத்து அலங்கரித்து வைத்திருந்தது மிகவும் அழகு. மேலும் அந்தப் பூக்களின் அறிவியல் பெயரை எழுதி வைத்திருந்தனர். நடுவே நமது சாமந்திப்பூ கூட பார்க்க முடிந்தது. மேட்டுப்பாளையம், ஊட்டி இடையே ஓடும் தொடர்வண்டியைப் பூக்களால் செய்து வைத்திருந்தனர். இந்திய வரைபடமும் மலர்களால் வரைந்து வைக்கப்பட்டிருந்ததைப் பார்க்கும்போது





நாட்டுப்  பற்று அதிகமானது. நான் பார்த்திராத அரியவகை மலர்களைப் பார்த்தேன். ரோஜா மலரை செடியில் பார்த்திருக்கிறேன். ஆனால் மரத்தில் ரோஜா மலர் இருப்பதைப் பார்த்து வியந்தேன். மலர்களைக் கண்ட மகிழ்ச்சியோடு அங்கிருந்து கிளம்பினோம்.

### ஊட்டி சுற்று பயணம்

காரில் செல்லும் போதே கேரட், பூண்டு, நூக்கல், மிளகு, தேயிலை போன்ற பயிர்கள் விளைந்திருப்பதைக் கண்டோம். அங்கு விளைந்த கேரட், முள்ளங்கி வாங்கி சாப்பிட்டோம். சுவையாக இருந்தது. கூடலூர் வழியாக சென்று மலைகளின் அழகினை ரசித்துக் கொண்டே சென்றோம். அங்குள்ள ராணுவப் பயிற்சி மையத்தை பார்வையிட்டோம். ராணுவக் குடியிருப்புகளைப் பார்வையிட்டோம். ராணுவப் பயிற்சி மையத்திலுள்ள (Madras Regimental Center) ராணுவக் கண்காட்சியைப் பார்வையிட்டோம். அந்த ராணுவ மையத்தில் பயிற்சி பெற்று சிறந்த ராணுவ வீரர்களாக இருந்த வீரர்களின் சாகசங்கள், வாங்கிய மெடல்கள் மற்றும் பதக்கங்கள் போன்றவற்றைக் குறித்த காணொளியைக் கண்டு எங்களுக்கும் ராணுவ வீரர் ஆக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அங்கிருந்து வரவே மனதில்லை. மீண்டும் கார் பயணம். போகும்போதே தமிழ்நாட்டிற்கு நீடில்ஸ் தயாரிக்கும் கம்பெனியைப் பார்த்தோம். பழக் கண்காட்சி, மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி செல்லும் பழமை வாய்ந்த புகைவண்டி, தூரத்து மலையருவி என பார்த்துக்கொண்டே சென்றோம். ராணுவத்திற்கு துப்பாக்கி மருந்து தயாரிக்கும் கம்பெனி நிலத்தடியில் உள்ளது என்றும் அதன் மேல்தான் நாம் பயணம் செய்கின்றோம் என்றும் கார் ஓட்டுனர் சொன்னதைக் கேட்டதும் அந்தக் கம்பெனியைப் பார்க்கும் ஆர்வம் எழுந்தது. ஆனால் அதன் உள்ளே செல்ல அனுமதி இல்லை.







### சாக்லேட் தயாரிக்கும் முறை

சாக்லேட் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நேரில் சென்றோம். அங்கு இரண்டு அக்காக்கள் சாக்லேட் தயாரித்துக் கொண்டு இருந்தனர். அவர்களிடம் சாக்லேட் தயாரிப்பது எப்படி என்று கேட்டோம். அவர்களும் எங்களுக்கு செய்முறை குறித்து விளக்கினார்கள்.

### டார்க் சாக்லேட் செய்யும் முறை

பால் 65%, கொக்கோ பவுடர் 35% கொண்டு தயாரிப்பது டார்க் சாக்லேட்.

**நார்மல் சாக்லேட்**

75% பால், 25% கொக்கோ பவுடர் கொண்டு தயாரிப்பது நார்மல் சாக்லேட்.

**மேங்கோ சாக்லேட்**

பால் 70% மேங்கோ 30% கலந்து தயாரிப்பது மேங்கோ சாக்லேட்.

**வெண்ணிலா சாக்லேட்**

பால் 80%, வெண்ணிலா எசன்ஸ் 20% கலந்து தயாரிப்பது வெண்ணிலா சாக்லேட்.

இந்த தகவலைப் பகிர்ந்துகொண்ட இரண்டு அக்காக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு, அங்கு தயாரித்த சாக்லேட் சிலவற்றை வாங்கிக்கொண்டு அங்கிருந்து கிளம்பினோம்.

(குறிப்பு: அந்த அக்கா சொன்னதை நான் வீட்டில் அம்மாவிடம் சொல்லி அதே போல் தயாரிக்கச் சொல்லியிருக்கிறேன்)

### டீத்தூள் தயாரிக்கும் முறை

டீத்தூள் தயாரிக்கும் தொழிற்சாலை சென்றோம். நந்தகோபால் என்ற தொழிலாளி தேயிலை எவ்வாறு டீத்தூள் ஆகிறது என்ற செய்முறை விளக்கத்தை கூறினார். Bud, Baby, Mother என்று தேயிலையில் மூன்று வளர்ச்சிகள் இருக்கும். 15 நாட்களுக்கு ஒருமுறை இலை பறிக்கப்படும்.





ஒரு முறை விதை போட்டால் 100 வருடம் பயன் தரும் தேயிலை Mother பருவத்தில் இலை பறிக்கப்பட்டு தொழிற்சாலைக்கு அனுப்பப்படும். லேசான சூட்டினால் இலை உலர வைக்கப்படும். பின்பு காம்புகள் எடுக்கப்பட்டு, பொடியாக அரைக்கப்படும். இவை தரம் பிரிக்கப்பட்டு பலவிதமான டீத்தூள் தயாரிக்கப்படுகிறது என்று செய்முறை விளக்கம் அளித்தார். நேரடியாகவே டீத்தூள் தயாரிக்கும் இயந்திரங்களை நாங்கள் பார்த்தோம். தேயிலை விதைகளையும் எங்களுக்குக் காண்பித்தார்கள். எனது நண்பர்கள் மற்றும் வீட்டில் உள்ள அனைவரிடமும் டீத்தூள் தயாரிக்கும் முறையைப் பகிர்ந்து கொண்டேன்.

### யூகலிப்டிஸ் தைலம் தயாரிக்கும் முறை

யூகலிப்டிஸ் தைலம் தயாரிக்கும் முறை பற்றியும் விளக்கி கூறினார். இலை மற்றும் 500 லிட்டர் தண்ணீர் கொண்டு உயர் வெப்ப நிலையில் குறிப்பிடப்பட்ட நேரம் கொதிக்க வைத்து யூகலிப்டிஸ் தைலம் (நீலகிரி தைலம்) தயாரிக்கின்றனர். 300 கிலோ யூகலிப்டிஸ் இலைகளுக்கு மூன்று லிட்டர் தைலம் கிடைக்குமாம். இவற்றைக் கேட்டபோது எங்களுக்கு ஆச்சர்யமாகவும், புதிய தகவல்களை அறிந்து கொண்ட மகிழ்ச்சியும் கிடைத்தது.

அழகான இடங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், தொழிற்சாலைகள் இவற்றைப் பார்த்து, கேட்டுத் தெரிந்துகொண்ட நிறைவுடன் தொடர் வண்டிக்கு நேரம் ஆனதால் நீலகிரி மாவட்ட மலைகளில் இருந்து கீழ்நோக்கிப் பயணம் செய்தோம். கொஞ்சம் கொஞ்சமாக இதமான குளிர் விலகி கடுமையான வெயில் அடிக்கத் துவங்கியது. ஆம், நாங்கள் கோயம்புத்தூர் வந்துவிட்டோம். அப்போதுதான் தெரிந்தது காலை 6 மணியில் இருந்து மதியம் இரண்டு மணிவரை சாப்பிடவும் மறந்து விட்டோம் என்று! ஒரு சைவ உணவகத்தில் உணவருந்தி விட்டு தொடர்வண்டி ஏறி சென்னையை நோக்கிப் பயணம் செய்தோம்.

இந்த அழகான பயணம், அழகான நினைவுகள் எங்கள் இயக்குனர் வர்ஜில் டி. சாமி இல்லையெனில் கண்டிப்பாக எங்களுக்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு பாதுகாப்பாக வீடு சேர்ந்தோம். ■



**K. நிஷாந்த்,**
10-ஆம் வகுப்பு, எண்ணூர்

# பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு மாநில மாநாட்டில் அருணோதயா குழந்தைகள் சங்கக் குழந்தைகள் பங்கேற்பு

## நேர்காணல்

**ஓவியா:** ஹாய் சந்தோஷ். எப்படி இருக்கீங்க?

**G.சந்தோஷ்:** நான் நல்லா இருக்கேன் ஓவியா. நீங்க எப்படி இருக்கீங்க?

**ஓவியா:** நான் நல்லா இருக்கேன்! அதோ யுவஸ்ரீயும் வந்து விட்டாள்! எப்படி இருக்க யுவஸ்ரீ?

**யுவஸ்ரீ:** நான் நலமாக இருக்கேன்! ஆமாம் எங்கள் இருவரையும் சந்திக்க வேண்டும் என்று சொல்லி இருந்தாயே. ஏதேனும் முக்கியமான விஷயமோ?

**ஓவியா:** ஆமாம் யுவஸ்ரீ, முக்கியமான விஷயம்தான்! பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு 8வது மாநில மாநாடு நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி என்னும் ஊரில் நடைபெற்றது. அதில் இளம் வழிநடத்துனராக நீயும், நிர்வாக குழு சார்பில் தோழன் சந்தோஷும் கலந்து கொண்டு வழி நடத்தி இருந்தீர்கள் அல்லவா. அது குறித்து உங்கள் அனுபவங்களை அறிந்து கொள்ளவே அழைத்தேன்.

**யுவஸ்ரீ:** எங்களுக்கு அங்கு நிறைய அனுபவங்கள் கிடைத்தன. என்னுடன் சேர்ந்து 5 குழந்தைகள் இளம் வழிநடத்துனராக இருந்து 15 மாவட்டங்களில் உள்ள குழந்தைகளை வழிநடத்தியது மறக்கமுடியாத அனுபவம். ஒவ்வொரு இளம் வழிநடத்துனருக்கு மூன்று மாவட்டங்கள் வீதம் பிரித்து, அவர்கள் மாவட்டங்களில் கல்வியில் என்ன பிரச்சனைகள் உள்ளது என்று கலந்துரையாடல் செய்தோம். எனக்கு நீலகிரி, கோயம்புத்தூர், நாகப்பட்டினம் என்ற மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த குழந்தைகளை வழிநடத்தும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் பயந்தேன். அருணோதயா குழந்தைகள் சங்கக் குழந்தைகளை இளம் வழிநடத்துனராக இருந்து வழிநடத்தியுள்ளேன். ஆனால், வேறு மாவட்டக் குழந்தைகள் நான் சொல்வதைக் கேட்பார்களா என்று பயந்தேன். ஆனால் அவர்கள் நான் சொல்வதைப் புரிந்து கொண்டு எனக்கு ஒத்துழைப்பு அளித்தனர். எனக்குத் தெரியாத பல பிரச்சனைகள் அவர்கள் மாவட்டங்களில் இருந்தது எனக்குப் புதிதாக இருந்தது. ஆர்வமாகவும் இருந்தது. ஒவ்வொரு மாவட்டக் குழந்தைகளுக்கும் தனித்தனி பிரச்சனைகள் இருப்பதை அறிந்து கொண்டேன். அந்த குழந்தைகளுடன் பேசியது, வழிநடத்தியது எனக்கு நம்பிக்கையும், தைரியத்தையும் கொடுத்தது. நான் இளம் வழிநடத்துனராக இருந்து என்னைப் போல் குழந்தைகளை வழிநடத்தியது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.

**ஓவியா:** அடேங்கப்பா கேட்கும்போதே எனக்கும் ஓர் இளம் வழிநடத்துனராக ஆக வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது யுவஸ்ரீ. சந்தோஷ் உங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்களா?

**சந்தோஷ்:** நான் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பில் துணை செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் நான் நடத்திய முதல் மாநாடு இது. நீண்ட வருடங்களுக்குப் பிறகு மாநாடு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. நிர்வாகக் குழுவாக இருந்து மாநாட்டை வழிநடத்தியது என் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவியது. இளம் சாதனையாளர்களாக வருகை புரிந்த முன்னாள் கூட்டமைப்பு உறுப்பினரான திரு. ஷரிப் அண்ணா, மோனிஷா அக்கா அவர்கள் பகிர்வு கேட்டபோது நானும் சாதனையாளர் ஆக வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. புதிய உறுப்பினர்கள் தேர்தல் மிகவும் விறுவிறுப்பாகச் சென்றது. புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்பு நடந்தபோது நான் பதவி ஏற்ற நினைவுகள் வந்தன. அந்த இரண்டு ஆண்டுகள் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்தது, என்னை நான் மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பாக அமைந்தது. எனக்கு பங்கேற்க வாய்ப்பு கொடுத்த அருணோதயா குழந்தைகள் சங்க உறுப்பினர்களுக்கும் இயக்குனர் அவர்களின் வழிகாட்டுதலுக்கும் என் நன்றி.

**ஓவியா:** உங்கள் இருவரின் அனுபவங்களைக் கேட்கும் போது மிகவும் ஊக்கமளிக்கும் விதமாக உள்ளது. வாய்ப்பு கிடைத்தால் நானும் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு நிகழ்வுகளில் கலந்துகொள்ள விரும்புகின்றேன். உங்கள் இருவரின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டமைக்கு மனமார்ந்த நன்றி. ■



சு.ஓவியா, 7-ஆம் வகுப்பு

# நினைவில் நின்றவை

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் கே.பவித்ரா. என் மகன் கே.ஞானவேல், மகள் கே. கல்பனா ஆகிய இருவரும் அருணோதயா குழந்தைகள் சங்கத்தில் உறுப்பினராக உள்ளனர். அருணோதயா சங்கம் என் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், வாழ்க்கைக்கும் பெரும் உதவியாக உள்ளது. கொரோனா என்னும் கொடிய நோய் அனைவரையும் வீட்டுக்குள் முடக்கி விட்டது. அப்பொழுது பிள்ளைகள் பள்ளி செல்லவில்லை. பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படக்கூடாது என்று வீடு தேடி வந்து குழந்தைகளுக்குப் பயிற்சி தந்தனர். அப்பொழுதுதான் அருணோதயா என்பது என்ன என்று எங்களுக்குத் தெரிய வந்தது.

நித்யா என்னும் ஆசிரியர் எங்கள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான பயிற்சியும் குழந்தைகள் படிப்பதற்குத் தேவையான அனைத்து பொருட்களையும் கொடுத்து, மீண்டும் பள்ளி திறக்கும்போது அனைவரும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என ஆலோசனைகளையும் கொடுத்தார்.

நாங்கள் கன மழையினால் பாதிக்கப்பட்டு இருந்தபோதும் எங்களுக்கு அருணோதயாவின் மூலமாக நிவாரணப் பொருட்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. பள்ளி செல்வதற்கு ஏற்றவாறு குழந்தைகளுக்குப் புத்தகப் பை, பென்சில், நோட்டு அனைத்தும் கொடுத்தார்கள். அன்று முதல் நாங்களும் எங்கள் குழந்தைகளும் மூன்று வருடமாக இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றோம். குழந்தைகள் அனைத்து பயிற்சிகளுக்கும் சென்று வருகிறார்கள். குழந்தைகளின் எதிர்காலத்திற்கு உதவும் அருணோதயாவிற்கும், அதன் இயக்குனர் அவர்களுக்கும் மிக்க நன்றி.



**K. பவித்ரா, சமவயது பயிற்சியாளர், திருவொற்றியூர்.**

# புத்திசாலி முயல்

**சிறுகதை**



ஒரு சிறிய காட்டில் ஓர் இளம் முயல் வசித்து வந்தது. அதன் பெயர் மதி. தன் நண்பர்களுடன் விளையாடி காட்டில் அலைந்து திரியும் ஒரு சந்தோஷமான முயல்தான் மதி. அப்படி ஒரு நாள் காட்டில் அலைந்து திரியும்போது, மதியம் ஒரு தந்திர நரியைப் பார்த்தது. அதன் பெயர் வேதா.

அந்த வேதா, மதியிடம் ஒரு வண்ணமயமான மாத்திரையைக் கொடுத்து, "இது உனக்கு உயரமாக குதிக்க உதவும்" என்றது. மதி அந்த மாத்திரையை எடுத்துக்கொள்ள விரும்பியது. ஆனால், அது தன் பெற்றோர் சொன்னதை நினைவு கூர்ந்தது. "அன்னியர்களிடம் எதையும் வாங்கக்கூடாது. உடலுக்கு நல்லது இல்லாத எதையும் உட்கொள்ளாதீர்கள்" என்று முயலின் பெற்றோர்கள் சொல்லியிருந்தார்கள். மதி வேதாவிடம் நாகரிகமாக மறுத்துவிட்டது. அது தன் நண்பர்களிடம் அந்த சம்பவத்தைச் சொன்னது. அதன் நண்பர்கள் அனைவரும் வேதாவிடமிருந்து விலகியே இருந்தன. ஆனால், சிறிது நாட்கள் கழித்து கிராமத்தில் உள்ள விலங்குகள் சில அசாதாரணமாக நடந்து கொண்டன. அவை அனைத்தும் அந்த நரியின் வேலைதான் என்று தெரிய வந்தது. இதை அறிந்த முயலும் அதன் நண்பர்களும் இணைந்து அந்த நரியை காட்டைவிட்டே வெளியே விரட்டின. இதைப் போல் நாமும் போதை என்ற அரக்கனை அழிக்க, விழிப்புடன் இருக்க வேண்டும். ■



**M.K.நகுலன்,**
**11-ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை**




- அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
(விடாமுயற்சி பலன் தரும்)

- அழுத பிள்ளை பால் குடிக்கும்.
(முயற்சி செய்தால் வெற்றி கிட்டும்)

- அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
(முன்மாதிரி)

- யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும்.
(காலம் மாறி வரும்)

- யானைக்கும் அடி சறுக்கும்.
(பெரியவருக்கும் தவறு நேரிடலாம்)

- ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.
(எதையும் அளவோடு செய்தல் வேண்டும்)

- ஆழம் அறியாமல் காலை விடாதே.
(எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்)

- ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம். (கோபம் சிந்தனைக்கு இடையூறு) ■



**N.தீபிகா, 10ஆம் வகுப்பு, நேருநகர்**




# பள்ளிக்கூடம்

**கவிதை**

அறிவுச் சுரங்கம் அகழ்ந்திருக்க
ஆசிரியர் குழாம் துணை இருக்கும்
இனிதே நண்பர் சூழ்ந்திருக்க
ஈங்கு கற்றல் இனித்திருக்கும்
உருப்போட பாடங்கள் பல இருக்க
ஊசல் மனது தவமிருக்கும்
எத்தரத்தில் மாணவர் இருந்தாலும்
ஏற்றம் காண வழி இருக்கும்
ஐயங்கள் இங்கு கலையட்டும்
ஒப்பிலா செல்வம் கல்வியது
ஓதி ஒழுங்குற கற்பிக்கும்
ஔவை முதல் கணினி வரை
எஃகுபோல் அறிவை பதிப்பிக்கும்!



**P.கவிதா, 11 ஆம் வகுப்பு, நேருநகர்**

# பொது தேர்வு முடிவுகள்

குழந்தைகள் சங்கத்திலிருந்து இந்த வருடம் 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றி அடைந்த மாணவர்களுக்கு அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கின்றோம்.

### 10 ஆம் வகுப்பு

10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 109 குழந்தைகள் தேர்வு எழுதினார்கள். இதில் 13 குழந்தைகள் 400-க்கும் மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 34 குழந்தைகள் 300 லிருந்து 400 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 40 குழந்தைகள் 200 லிருந்து 300 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

### 12 ஆம் வகுப்பு

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை 115 மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளனர். இதில் 9 குழந்தைகள் 500 மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 47 குழந்தைகள் 400 லிருந்து 500 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 48 குழந்தைகள் 300 லிருந்து 400 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். 4 குழந்தைகள் 200 லிருந்து 300 மதிப்பெண் பெற்றுள்ளனர்.

தேர்வில் வெற்றி பெறாத குழந்தைகளிடம் மறுதேர்வு எழுதுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டு அவர்கள் மறு தேர்வு எழுதி, தொடர் கல்வி பயில்வதற்கான ஆதரவு அளித்து வருகின்றோம், 10 ஆம் வகுப்பு வெற்றி பெற்ற குழந்தைகள் 11 ஆம் வகுப்பும், 12 ஆம் வகுப்பு முடித்த குழந்தைகள் கல்லூரிகளிலும் படிப்பைத் தொடர்வதற்கான ஊக்கம் அளிக்கப்பட்டு ஆதரவும் அளித்து வருகின்றோம்.



ஸ்ரீமதி



சௌந்தர்யா

செல்வி ஸ்ரீமதி அவர்கள் 10 ஆம் வகுப்பில் 491 மதிப்பெண்களும், செல்வி சௌந்தர்யா அவர்கள் 12 ஆம் வகுப்பில் 549 மதிப்பெண்களும் பெற்று முதல் இடத்தைப் பெற்றுள்ளனர்.

# IMPORTANCE OF EDUCATION


* **International Education Day is celebrated on 24 January!**
* **Education is very Important to life!**
* **Education is about knowledge and learning Skills**



பிரஜித் சஞ்சய்,
6ஆம் வகுப்பு






**உங்கள் படைப்புகளையும், செய்திகளையும், கருத்துக்களையும் வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்**